# WORD OF CHRIST

# (கிறிஸ்துவின் வசனம்)

மரம் 2 | கொலோசெயர் 3:16 | கனி 6

ஆசிரியர்: | ஜனவரி

சகோ. **அர்ச்சுனன்** | II கொரிந்தியர் 3:6 | 1994


வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக!

புத்தாண்டில் உங்களை இப்பத்திரிக்கையின் வாயிலாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். புதிய, புதிய பல தீர்மானங்களை எடுத்து இருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். அவைகளில் வளர்ந்து பெருகி ஆவிக்குரிய கனிகளை கொடுங்கள். ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள். கர்த்தர் பெரியகாரியங்களைச் செய்வாராக!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம்மனைவரோடுங்கூட இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பதாக! ஆமென்

ஆசிரியர்

RK

## COME! HEAR! DO!

### வாருங்கள்! கேளுங்கள்! செயல்படுங்கள்!

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத் 11:28ல் கூறுவதை வாசிக்கிறோம். உங்களுக்கு கவலையா, வேதனையா, கஷ்டமா, ஏன் கலங்குகிறீர்கள். உங்களை அன்போடு அழைக்கும் இயேசுவண்டை வாருங்கள். அப்பொழுது உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள். இந்த பூமியில் யாரையும் நம்பி ஏமாறாதீர்கள். ஆண்டவர் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு அவர் வார்த்தைக்கு செவிகொடுங்கள். மேலும் ஆண்டவர் சொல்லும் வார்த்தையை கவனியுங்கள். ஒருவன் என் பின்னேவர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் லூக் 9:23. ஆம் பிரியமானவர்களே!

தன்னைத்தான் வெறுத்து நம்முடைய பாடுகளை அனுதினமும் எடுத்துக்கொண்டு பின்பற்ற வேண்டும். என்னிடத்தில் வருகிறவர் களை புறம்பே தள்ளுகிறதில்லை என்கின்றார்.

விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்று ரோமர் 10:17 ல் வாசிக்கின்றோம் கிறிஸ்துவினுடைய வார்த்தையை கேட்கவேண்டும். அப்படி கேள்வி படும் போது நம்மில் இருக்கிற தவறுகளை அகற்ற வழி கிடைக்கும் உண்மைக்கு செவி கொடுத்து வசனத்திற்கு கீழ்படிகின்றோம். மாற்கு 5:25-29ல் பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயை குறித்து வாசிக்கின்றோம். அவள் இயேசுவை குறித்து கேள்விப்பட்டாள் என்று 27ம் வசனத்தில் மிக தெளிவாக பார்க்கின்றோம் உடனே அவள் நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொன்னாள். அப்படியே அவள் தொட்டு சுகமானாள்.

மேற்கண்ட இரண்டு காரியங்களை நம் வாழ்க்கையில் செய்தால் போதும் என்று அநேகர் நினைக்கலாம். சகோதரனே, சகோதரியே! அதுமட்டுமல்ல. அதன் படி செயல்பட வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார், ஆண்டவர் இயேசு நல்ல உவமையை தருகின்றார். மாற் 4:20ல் வசனத்தை கேட்டு, ஏற்றுக்கொண்டு ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார் என் அன்பு சகோதரனே, சகோதரியே! ஆணடவரிடம் முதலாவது வந்து பின் கேள்விபட்டு, அதன்பின் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். சீஷர்களும் கூட உடனே தங்கள் வலைகளை விட்டு அவருக்குப்பின் சென்றார்கள் என்று மாற் 1:18ல் வாசிக்கின்றோம் அந்தப்படியே நாமும் செயல்படவேண்டும்.

இந்த மூன்றையும் லூக் 6:47 ல் ஆண்டவர் கூறுவதைப் பாருங்கள். என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குச் சாண்பிப்பேன் என்கிறார், கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போட்டு வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பிடுவதாக வாசிக்கின்றோம் பிரியமானவர்களே இப்படிப்பட்ட கன்மலையாகிய கிறிஸ்துவின் மேல் கட்டப்படுவோம். கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக!

---

கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது யாக் 2:26

அழைக்கின்றோம்! அன்பு கூறுகிறோம்! ஆனந்திப்போம்!

## 12-வது வருடாந்திர தேசிய கருத்தரங்கம்

1994, பிப்ரவரி 13, 14 மற்றும் 15 தேதிகளில் ஞாயிறு மாலை 4 மணிக்கு கருத்தரங்கம் துவங்குகின்றது.

இடம்:

**கிறிஸ்துவின் சபை 13, சாய்நகர், சென்னை - 600 082.**

தொலைப்பேசி: 044 - 5370882.

பொருள்,

# "கிறிஸ்துவுக்குள் சந்தோஷம்"

பேச்சாளர்கள்:

இந்தியா மற்றும் அயல் நாடுகளிலிருந்து வருகைதருகின்றார்கள்.

உங்களுடைய வருகைக்கான பதிவு மற்றும் விபரங்களுக்கு தொடர்பு கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்.

சகோ. பீட்டர் சாலமோன்

## O சபை செய்திகள்

1993 டிசம்பர் 31த் தேதி இரவு 10 மணி முதல் 1994 ஜனவ
1ம் தேதி காலை 2 மணி வரை ஸ்தோத்திரக் கூட்டம் வத்தலக்குண்
கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்றது. அநே
சகோதர, சகோதரிகள் கலந்து கொண்டு புதிய வருடத்தில் புத்
புதிய தீர்மானங்களை எடுத்துக் கொண்டனர்.

## O பரிசு.

டிசம்பர் மாத வேத அறிவுப்போட்டியில் பரிசு பெறுபவர்க

| | | |
|---|---|---|
| 1. | சகோதரி எலிசபெத் கலைவாணி | வத்தலக்குண்டு |
| 2. | ,, ஜெய அமுதா | ,, |
| 3. | ,, ஸ்டெல்லா | ,, |
| 4 | சகோ. தயாளன் | ,, |
| 5. | ,, மாசிலாமணி | அரங்கபாளையம் |
| 6. | ,, ராஜாமணி | மதுரை |
| 7. | சிறுமி மெடோஸ் வைலட் | வத்தலக்குண்டு |
| 8. | ,, ஜாஸ்மின் ஆரோக்கியமேரி | அம்மாபட்டி |
| 9. | சிறுவர் எட்வின்ராஜ் | மதுரை |

## O டிசம்பர் மாத இதழின் விடைகள்

1 தேவனை சங் 10:4
2 அவன் வீட்டாரே மத் 10:36
3 அன்பின் ஓசியா 11:4
4 புதைத்து வைத்தான் மத் 25:18
5 நியாயப்பிரமான போதகரா-
யிருக்க I தீமோ 1:7
6 இல்லை
7 தாவீது
8 பாக்கியவான்
9 சர்வ வல்லமையுள்ள கர்த்த
10 பெருமையுள்ளவர்களுக்கு

## O சிறுவர் வேத அறிவுப் போட்டி விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஒருக்காலும் | யோவா | 1:18 |
| 2 | வசனங்கள் | ,, | 6:63 |
| 3 | நிலைத்திருந்தால் | ,, | 8:31 |
| 4 | அறிவதே | ,, | 17:3 |
| 5 | விசுவாசிக்கிறார்கள் | ,, | 20:29 |

---

கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே யாக் 5:8

## O இம்மாத வேத அறிவுப் போட்டி

1 சந்திரனை எதற்காகப் படைத்தார்?

2 அவர் பாடுபட்டபின்பு எத்தனை நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமானார்?

3 என் கட்டளைகளையும் என் போதகத்தையும் எதைப்போல் காத்துக்கொள் அப்பொழுது பிழைப்பாய் என்கிறார்?

4 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனுனல் யாரை பின்பிற்றக் கடவன் என்று இயேசு சொல்கிறார்?

5 கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே என்ன உண்டு?

6 புதியஏற்பாட்டில் மொத்தம் எத்தனை புத்தகம், அதிகாரம், வசனம் உண்டு?

7 மனுஷன் யாருடைய சாயலாக உணடாக்கபபட்டு உள்ளான்?

8 இஸ்ரவேல் மேல் ஏழு நாட்கள் இராஜாவாய் இருந்தவன் யார்?

9 சீஷர்கள் இயேசுவுக்கு ஒப்பாக படமோ அல்லது சிலையோ வைத்து இருந்தார்கள் என்று புதிய ஏற்பாட்டில் நாம் காண்கின்றோமா?

10 விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும் எங்கே இருப்பார்கள்?

மேற்கண்ட கேள்விகளில் முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு வேதத்திலிருந்தும் பதில்எழுதி இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும்.

## O இம்மாத சிறுவர் வேத அறிவுப் போட்டி

(அப்போஸ்தல நடபடிகளிலிருந்து - வசன ஆதாரத்துடன் நிரப்புக)

1. இரட்சிக்கப்படுகிறவர்களைக் .......... அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.
2. முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு ......•.... என்கிற பேர் வழங்கிற்று.
3. தினந்தோறும் வேத வாக்கியங்களை .......... பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.
4. வாரத்தின் முதல் நாளிலே .......... பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில்
5. நீங்கள் ....... .. ........ உணராதிருப்பீர்கள் கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள்.

---

நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார் மத் 19:17

## THE NATIONAL BIBLE COLLEGE,
## APPLICATIONS ARE INVITED.

FOR

BACHELOR OF BIBLICAL STUDIES, B.Bs.,

THREE YEARS DEGREE COURSE.

APPLY TO, THE REGISTRAR,

13, SAINAGAR, JAWAHAR NAGAR, POST. MADRAS - 600082.

WITH YOUR EDUCATIONAL AND PERSONAL BIO-DATA


## பரலோக ராஜ்யம் எதற்கு ஒப்பாயிருக்கிறது?

1. தன் நிலத்தில் நல்லவிதையை விதைத்த மனுஷனுக்கு மத் 13:24
2. கடுகு விதைக்கு மத் 13:31
3. புளித்த மாவுக்கு மத் 13:33
4. நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு மத் 13:44
5. நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு மத் 13:45
6. கடலிலே போடப்பட்டு சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு மத் 13:47

## வாசகர்
## அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்


If Undelivered Please Return To:

**THE EDITOR**

**Word of Christ, Post Box No. 5**

**BATLAGUNDU - 624 202. Anna Dt.**


---


**For Private Circulation only.**


---


Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu.